29.07.2026. **OS.No. 66 / 2020**

**பி.வா.சா. 4 பெயர்: நாகேந்திரன் த/பெ. மாரி**

**சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை:**

சா.சா.ஆ.4 ல் சர்வே எண் 4/ E2 அருகில் உள்ள புல எண் 4/3D ல் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சிறிய மாரியம்மன் கோவில் ஒன்று இருந்ததாகவும் அதை கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பாக புதுப்பித்து வழிபட்டு வருவதாகவும் வாதம் வைத்த விவரத்தை அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ தரப்பினர் ( பிரதிவாதிகள் ) மாரியம்மன் கோவில் வழிபாடு மற்றும் திருவிழா செய்யக்கூடாது என சமாதான பேச்சில் முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சா.சா.ஆ.5ல் மேற்படி அதே பிரச்சனை சம்பந்தமாக தான் மீண்டும் சமாதான கூட்டம் நடைபெற்றது என்றால் சரிதான். சா.சா.ஆ.6 ல் 18.01.2024 தேதியில் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தையில் சா.சா.ஆ.4ல் கண்ட வருவாய் கோட்டாட்சியர் செயல்முறை ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு இரு தரப்பினரும் நடந்து கொள்ள வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. மேற்படி சா. சா.ஆ. 4 –ல் பிறப்பிக்கப்பட்ட கோட்டாட்சியரின் உத்தரவு நாளது தேதி வரை ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 4/3D ல் கோயில் இருப்பதாக வருவாய்த்துறை ஆவணங்கள் பரிசீலனை செய்ததில் தெரிய வந்ததா என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை. இரு தரப்பினரும் நீதிமன்ற தீர்ப்பை பொறுத்து தான் கோவில் திருவிழா பூஜை வழிபாடு செய்ய வேண்டும் என்றால் சரிதான். சர்வே எண் 4/3D என்பது அ – பதிவேட்டில் நிலவியல் பாதை பட்டா எண் 100 என கண்ணன் மற்றும் நான்கு நபர் என உள்ளது. சர்வே எண் 4/3E2 என்பது பட்டா எண் 133 என ஜெயராமன் வகையறா என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி சாட்சியம் அனைத்தும் நான் கொண்டு வந்துள்ள சா.சா.ஆ.4 முதல் 6 ஆவணங்களின் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

**29.07.2026. OS.No. 66 / 2020**

**பி.வா.சா. 5 பெயர்: மோகன் த/பெ. மணி**

**சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை:**

வெண்ணாம்பட்டி கிராம சர்வே எண் 4/3Dயில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு டாரிப் 5ல் 8 12 2010ல் மின் இணைப்பு எண் 08–160–009–131 என கொடுக்கப்பட்டது அது தற்போது மின் இணைப்பு எண் 08–136–018–466 ஆக உள்ளது. கிராம நிர்வாக அலுவலர் சர்வே எண் 4/3Dல் மாரியம்மன் கோவில் உள்ளதாகவும் அதனுடைய தற்கால தர்மகத்தா மாதப்பன் எனக் குறிப்பிட்டு சான்று வழங்கியதின் அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு மின் இணைப்பு பெற மாதப்பன் கொடுத்த விண்ணப்பம் மற்றும் கிராம நிர்வாக அலுவலரின் சான்று தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.8 ஆகும். மேற்படி மின்னிணைப்பு தற்போது வரை உபயோகத்தில் இருந்து வருகிறது. பொதுவாக எந்த சர்வே எண்ணில் மின் இணைப்பு பெற்றார்களோ அதே சர்வே எண்ணில் மட்டும்தான் அதனை பயன்படுத்த வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு வேறு சர்வே எண்களுக்கு மாற்ற வேண்டும் எனில் அதை முறைப்படி எங்களுக்கு விண்ணப்பம் கொடுத்து அதன் பேரில் உத்தரவு பெற்று அதற்கான கட்டணம் பெற்று மாற்றம் செய்ய முடியும் என்றால் சரிதான். அவ்வாறு மேற்படி மின் இணைப்பு எண் வேறு சர்வே எண்களுக்கு மாற்ற விண்ணப்பம் ஏதேனும் வந்து மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சர்வே எண் 4/3E 2 விற்கு மேற்படி மின் இணைப்பு எண் ஏதேனும் மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.